RESEARCH ARTICLE

INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL
சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்

OPEN ACCESS

# சாமானியப் பெண்கள் வழி வரலாற்றைப் பதிவித்தல் - ராஜம் கிருஷ்ணன் உத்திகள்

மா. நந்தினி [அ] *, செ. ஹேமலதா [அ]

[அ] முதுகலைத் தமிழியல் மற்றும் உயராய்வுத் துறை, செல்லம்மாள் மகளிர் கல்லூரி, கிண்டி, சென்னை - 600 032, தமிழ்நாடு, இந்தியா,

# Rajam Krishnan's Techniques in Documenting History through the Perspectives of Ordinary Women

M. Nandhini [a,*], S. Hemalatha [a]

[a] PG Tamil and Research Department, Chellammal Women's College, Guindy, Chennai - 600 032, Tamil Nadu, India.

*Corresponding Author:

Received: 18-12-2025
Revised: 22-02-2026
Accepted: 03-03-2026
Published: 17-03-2026

Check for updates

**ABSTRACT**

Even after society became culturally developed through politics, arts and education, women's contributions were denied and excluded from historical records for hundreds of years. Recognising this reality, Rajam Krishnan gave importance to the voices and experiences of ordinary women in each of her field studies. This paper attempts to explain why recording history through the perspectives of common women is essential, and how Rajam Krishnan incorporated this understanding as narrative strategies in her novels.

**Keywords:** Ordinary Women, Revolution, Field Research, History.

## முன்னுரை

உண்மை நிகழ்ச்சிகளின் ஆதாரம் கொண்டு வாழ்வின் போக்குகளையும் சமூகச் சார்புகளையும் கணித்து நிகழ்கால பிரச்சனைகளைப் பற்றி சிந்திப்பதும் ஆக்கப்பூர்வமான முடிவுகளை ஆராய்வதையையுமே தனது இலக்கிய நோக்கமாக ராஜம் கிருஷ்ணன் வகுத்திருந்தார். (மானுடத்தின் மகரந்தங்கள் - என்னுரை)

எழுத்துப் பதிவுகள் உருவாவதற்கு முற்பட்ட காலத்தை வரலாற்றுக்கு முந்தைய காலம் என்றும், எழுத்துப் பதிவுகள் கிடைக்கப்பெறும் காலத்தை வரலாற்றுக் காலம் என்றும் வழங்குகிறோம். இந்த வரலாற்றுக் காலத்தில் சாமானிய மக்களின் குரல்வளை நசுக்கப்பட்டது. குறிப்பாக சாமானியப் பெண்களுக்கு கல்வி இராது ஆதலால் கருத்தும் இராது என்று ஒடுக்கினர். கள ஆய்வினை மேற்கொண்டு கதைகள் படைப்பதில் ராஜம் கிருஷ்ணன் வல்லவர். அவர் சாமானியப் பெண்கள் வழி வரலாற்றைப் பதிவித்தலில் கையாண்ட நுண்மையான உத்திகள் குறித்து இக்கட்டுரை விளக்க முற்படுகிறது.

## வரலாறும் பெண்களும்

வரலாற்றைப் பதிவு செய்யும் பொழுது அறிவார்ந்தவர்களின் பங்களிப்பு போதுமானது, கல்வியறிவு மறுக்கப்பட்ட பெண்களுக்கு அறிவு இல்லை என்றே கருதி வந்தனர். முகலாயர்களின் ஆட்சியில் ஏறத்தாழ 1587இல் அக்பரின் வேண்டுகோளுக்கு இணங்க அக்பரின் அத்தை குல்பதன் பேகம் (பாபரின் மகள், ஹுமாயுனின் சகோதரி) 'ஹுமாயுன் நாம' என்ற ஹுமாயூனின் வாழ்க்கை, அரசாட்சி, முகலாய சபையைக் குறித்து ஒரு வரலாற்றுப் புத்தகமாக எழுதினார். இது முகலாயர்கள் குறித்த வரலாற்றுப் பதிவுகளில் மிக முக்கியமான ஒன்று. பெண்களின் பார்வையில் இருந்து வரலாற்றைப் பதிவு செய்தது புரட்சி. அரசியல் முடிவுகளால் ஏற்பட்ட தாக்கம், மாளிகை, அரசவை, உணவு,

ஊழியர்கள், குடும்பம், வலி என இதுவரை வரலாற்றில் தொடாத இடங்களை ஒரு பெண்ணின் கருத்தியல் தொட்டது. ராஜம் கிருஷ்ணன் நம் தமிழ்ச் சமூகத்தில் இத்தகு புரட்சியைச் செய்திருக்கிறார். ஒவ்வொரு நாவலையும் ஒரு புதிய பரிசோதனை முயற்சியாகத்தான் ராஜம் கிருஷ்ணன் கையாண்டார். தன் கள ஆய்விலும் நாவல்களிலும் சாமானியப் பெண்களின் அனுபவங்களுக்கும் கருத்துகளுக்கும் அதீத முக்கியத்துவம் வழங்கியுள்ளார்.

## பாதையில் பதிந்த அடிகள்

விவசாயத் தொழிலுக்காக கீழ்த் தஞ்சையில் விவசாயிகள் இயக்கத்தை 1930களில் தோற்றுவித்தப் புரட்சிப் பெண்மணி மணலூர் மணியம்மா. இவர் 1953இல் காலமானார். அவருடைய வாழ்க்கை வரலாற்றை கிராமத்து எளிய விவசாயக் கூலி மக்களின் வாய்மொழியாகவே கேட்டறிந்து 'பாதையில் பதிந்த அடிகள்' எனும் நாவலைப் படைக்கிறார் ராஜம் கிருஷ்ணன். மணலூர் மணியம்மா வாழ்ந்த காலத்தில் சாமானிய மக்களின் பொருளாதார மேம்பாட்டிற்கு உதவியுள்ளார். இருப்பினும், சமூகத்தில் பெரும்பான்மை மக்கள் அவரை வெறுத்து ஒதுக்கினர். இவர் வாழ்ந்த விதம் பலருக்கு அச்சத்தை ஊட்டியது. மணியம்மா விதவையாக இருந்தும் கூட, பொதுவெளியில் வேட்டி சட்டை அணிவதும், அவர் நிலத்தை அவரே மேற்பார்வையிட்டதும் பண்ணையார்களுக்கு அறவும் பிடிக்கவில்லை. பெண்களைத் தவறாக வழிநடத்துகிறார் என்று வெறுப்பை உமிழ்ந்தனர். மணியம்மையின் இறப்பிற்குப் பின்னர் அவர் வாழ்ந்த ஊர்த்தெருக்களில் ராஜம் கிருஷ்ணன் கள ஆய்வுக்குச் சென்ற பொழுது ஒரு பெண், நான் அவரின் இறுதி ஊர்வலத்தைக் கண்டேன் என்று சொல்கிறார். ராஜம் கிருஷ்ணன் செறிவான ஒரு வினாவை எழுப்புகிறார். 'உங்களுக்கு என்ன தோணுச்சு?' அதற்கு அந்தப் பெண் 'வாழ்ந்தால் இவங்கள மாதிரி வாழணும்னு தோணுச்சு' என்கிறார். இந்த பதில், அடக்குமுறை இல்லாத நிம்மதியான வாழ்வை எதிர்நோக்கிக் காத்திருக்கும் பெண்களின் கனவு. ராஜம் கிருஷ்ணன், கள ஆய்வில் சாமானிய மக்களுக்குக் கொடுத்த முக்கியத்துவத்தை அவர் இயல்பாக வடிவமைக்கும் வினாக்களின் வழி அறியலாம். இறுதி ஊர்வலத்தில் எத்தனைப் பேர் இருந்தனர், முன்னிலை வகித்தது யார் போன்ற வினாக்களை எல்லாம் ஒதுக்கிவிட்டு, ஊர்வலத்தைக் கண்ட பெண்ணின் மனவுணர்வை அறிந்துகொள்ளத்தக்க வினாவைத் தொடுத்தது அவர் ஆய்வின் நோக்கத்தை உணர்த்துகிறது.

## இந்திய விடுதலைப் போரில் பெண்கள்

இந்திய நாட்டின் விடுதலைக்காகப் போரிட்டவர்கள், உயிர்நீத்தவர்களைக் கருத்தில் நிறுத்திப் பார்த்தால் அந்தப் பட்டியலில் பெண்கள் நம் நினைவிற்கு வருதல் அரிது. அத்தகு பெண்களின் வாழ்க்கையை குழந்தைகளுக்கு விளங்கும் வண்ணம் ராஜம் கிருஷ்ணன் படைத்த நூல் 'இந்திய விடுதலைப் போரில் பெண்கள்.' ஜான்சிராணி இலட்சுமிபாய், பிகாஜி காமா அம்மையார், கஸ்தூரிபா காந்தி, கவிக்குயில் சரோஜினி நாயுடு, ராஜ்குமாரி அம்ரித் கௌர், ருக்மினி லட்சுமிபதி, தில்லையாடி வள்ளியம்மை, சொரூபராணி, விஜயலட்சுமி, கிருஷ்ணா, கமலா, இந்திரா, எஸ். அம்புஜம்மாள், வை. மு. கோதைநாயகி, துர்காபாய் தேஷ்முக், அருணா ஆசப் அலி, கல்பனா தத் மற்றும் கேப்டன் லக்ஷ்மி போன்ற பெண் விடுதலைப் போராளிகளின் நாட்டுப்பற்றை, தியாகத்தை நாமும் அடுத்த தலைமுறையினரும் அறிவது இன்றியமையாதது. இந்த வீரம் பொருந்திய பெண்களை, ஒரு கிராமத்தில் அறிவொளி இயக்கத்தைக் கொணர்ந்து ஐந்தோ ஐம்பதோ வயது வரம்பின்றி அனைவரையும் படிக்க வைத்த 'அறிவொளி அம்மா' என்று எல்லோரும் அழைக்கும் சாமானியப் பெண்ணின் வழி ராஜம் கிருஷ்ணன் அறிமுகப்படுத்துகிறார்.

## உத்தரகாண்டம்

ராஜம் கிருஷ்ணன் எழுதிய இறுதி நாவலான 'உத்தரகாண்டத்தில்' 80 வயதான மூதாட்டியைக் கதைத் தலைவியாகப் படைக்கிறார். கடந்த கால நிகழ்வுகளில் இருந்து, தான் பெற்ற அனுபவங்களை அடுத்த தலைமுறைக்கு வழங்கும் ஞான போதனையாக எழுதாமல், பகுத்தறிவு வாய்ந்த சுயசிந்தனையோடு தன் நம்பிக்கைகளை மறுபரிசீலனை செய்யக்கூடிய மூதாட்டியாக அந்தப் பாத்திரத்தை அமைத்திருப்பதன் வாயிலாக ஒருவரின் புரிதல் காலத்திற்கு ஏற்ப மாற்றத்திற்கு உட்பட்டது தான் எனும் நிதர்சனத்தைப் பதிவு செய்கிறார் ராஜம் கிருஷ்ணன்.

## உணர்வடிப்படையில் அணுகுதல்

ராஜம் கிருஷ்ணன் மீது வைக்கப்பட்ட கடுமையான விமர்சனங்கள் அவருக்கு மிகுந்த வருத்தத்தைத் தந்தது. 'நீங்கள் ஒரு பெண்ணின் பார்வையில் தான் எழுதி இருக்கீங்க. உங்க நாவல்களில் சமூகப் புரட்சி என்பதெல்லாம் இல்லை.' (போராளி ராஜம் கிருஷ்ணன் களத்திலும்

வாழ்விலும், (நேர்காணல்) ப.79) 'கள இலக்கியம் இலக்கியமே அல்ல. அது வெறும் அறிக்கை தான்' (மானுடத்தின் மகரந்தங்கள், நிவேதிதா லூயிஸ் கட்டுரை, ப.272) என்று விமர்சித்தனர். அதற்கு ராஜம் கிருஷ்ணன் நான் ஒரு பெண். என்னால் எல்லாவற்றையும் ஒரு பெண்ணின் பார்வையில் தான் சொல்லவோ எழுதவோ முடியும் என்றும் வாழ்க்கை என்பது சித்தாந்த முறைப்படி நடப்பது அல்ல, தான் உணர்வுப்பூர்வமாகத்தான் எல்லாவற்றையும் பார்ப்பதாகவும் தெரிவித்திருக்கிறார். ராஜம் கிருஷ்ணன் உயிருடன் இருக்கும் பொழுது அவரது நூல்கள் நாட்டுடைமை ஆக்கப்பட்டன. வரலாற்றில் அதுவே முதல் முறை. பதிப்பகத்தார் மறுபதிப்பு செய்ய இயலாமல் சிரமப்படுவார்கள் என்று மறுத்திருக்கிறார்.

## முடிவுரை

சராசரிப் பெண்கள் வழி வரலாற்றைப் பதிவித்தல் என்பது ராஜம் கிருஷ்ணன் கையாண்ட மிகச்சிறந்த உத்தி. நம்மால் அவர்களுடன் எளிதில் ஒன்றிப்போக முடியும். சாமனிய மக்களுடன் உரையாடுவது வாழ்வின் சிக்கல்கள் குறித்த புரிதலையும், அவற்றை எதிர்கொள்ளும் உத்வேகத்தையும் கொடுக்கும். சாமானியப் பெண்கள் வழி வரலாற்றைத் தம் புனைகதைகளில் பதிவித்திருக்கும் ராஜம் கிருஷ்ணன், கள ஆய்வில் சாமானிய மக்களுள் ஒருவராகவே மாறி மாற்றத்திற்கான பயிரை விதைத்துச் சென்றிருக்கிறார். ராஜம் கிருஷ்ணன் போன்ற எழுத்தாளர்களால்தான் அடுத்தடுத்தத் தலைமுறை தனக்கான நீதியை கேட்டுப் பெறத் தன்னம்பிக்கை பெற்றது என்பதில் ஐயமில்லை. இத்தகு முன்னோடிகளை காலந்தோறும் நினைவு கூறுதல் இன்றியமையாதது.

## References


Jeevasundari P, Porali Rajam Krishnan kalathilum vazhvilum, NCBH, Chennai, 2025.

Rajam Krishnan, Indhiya viduthalai poril pengal, National Book Trust, New Delhi, 2024.

Rajam Krishnan, Kodugalum kolangalum, Cholan publications, Chennai, 2023.

Rajam Krishnan, Maanudathin magarandhangal, her stories, Chennai, 2023.

Rajam Krishnan, Uthirakandam, Meena enterprises, Thiruvallur, 2021.



**Funding:** No funding was received for conducting this study.

**Conflict of Interest:** The Author have no conflicts of interest to declare that they are relevant to the content of this article.


**About the License:**


Attribution 4.0 International (CC BY 4.0)

© The Author 2026. The text of this article is licensed under a Creative Commons Attribution 4.0 International License